*அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 21/2006(1V)*

*எனது இல: தா/4/3/1/14-1*
*அரசாங்க நிர்வாக,*
*உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு . 07*
*2008.07.30*

*அமைச்சுக்களின் செயலாளர்கள்,*
*மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,*
*திணைக்களத் தலைவர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள்*
*மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்.*

**அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தற்காலிக, அமய, பதிலீட்டு ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்த அலுவலர்களை நிரந்தரமாக்குதல்.**

*மேற்படி 2006.12.06 ஆந் திகதியில் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:21/2006 மற்றும் அதற்கு திருத்தங்களாக வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள் என்பவற்றின் பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.*

*02. 2008.06.30 ஆந் திகதியில் தற்காலிக, அமய, ஒப்பந்த மற்றம் சலுகை அடிப்படையின் பேரில் சேவையில் ஈடுபட்டுள்ள பின் குறிப்பிடும் அலுவலர்களை 2008.07.01 ஆந் திகதி தொடக்கம் நிரந்தரப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.*

*(1) 2008.04.07 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2006(III) இல் திருத்தியமைக்கப்பட்ட 2006.12.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:21/2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற 2008.06.30 ஆம் திகதியில் 180 நாள்கள் சேவையாற்றி இருக்கும் அலுவலர்கள்,*

*(2) சம்பந்தப்பட்ட பதவியில் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உரிய கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்காவிடினும் 2007.07.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:21/2006(I) இல் குறிப்பிட்டுள்ளவாறு 03 நாள்களுக்கு குறையாத பயிற்சி மற்றும் 2008.06.30 ஆம் திகதியில் 03 ஆண்டுளுக்கு குறையாத தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்.*

*03. இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள பயிற்சிகளை ஏற்றுக் கொள்ள முடியுமான நிறுவனங்களுக்கிடையில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையையும் இதற்குள் உள்ளடக்கப்படுகிறது.*

*04. 2008.07.01 ஆந் திகதியாகும் போது பயிற்சி பெற்றிராத ஊழியர்களுக்கு 2008.09.30 ஆந் திகதிக்கு முன்னர் பயிற்சி வழங்கி, அப் பயிற்சியை பூர்த்தி செய்யும் திகதியிலிருந்து நிரந்தரப் பதவி வழங்குதல் வேண்டும்.*

*05. 2008 ஆம் ஆண்டில் இதற்காக சம்பளம் செலுத்தும் பொருட்டு பொதுத் திறைசேரி மூலம் மேலதிக ஒதுக்கீடுகள் வழங்கப்பட மாட்டாது.*

*06. அச் சுற்றறிக்கையில் குறிக்கப்பட்ட ஏனைய தேவைகள் மேலும் ஆவ்வாறே நடைமுறைப்படும்.*

ஒப்பம்/டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு